# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜூலை 10, 2023 Weekly E-paper • July 10, 2023




## ஒரே நாடு பல பண்பாடு

சுப.வீரபாண்டியன்

## ஏன் வேண்டாம் பொது சிவில் சட்டம்?

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

## அவரால் எந்தப் பயனுமில்லை

தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜூலை 10, 2023 Weekly E-paper • July 10, 2023


# ஒரே நாடு பல பண்பாடு

சுப.வீரபாண்டியன்

*ஒரே நாடு, ஒரே பண்பாடு என்னும் பாசிச குரலுக்கு எதிராக, ஒரே மேடை, பல பண்பாடுகள், ஒரே மேடை, பல மதங்கள், பல மொழிகள், பல துறைகள் என அனைவரும் ஒருங்கிணைந்த மாநாடுதான், கடந்த ஒன்பதாம் தேதி, வேலூரில் நடைபெற்ற, திராவிட நட்பு கழகத்தின் மத நல்லிணக்க மாநாடு!*

**“பொது சிவில் சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டுவரக் கூடும் என்னும் அச்சம் நாடு முழுவதும் நிலவுகிறது. அப்படிக் கொண்டு வந்தால், இந்தியா முழுவதும் பற்றி எரியப் போகும் பிரச்சனையாக அதுதான் இருக்கும்”**









திறந்தவெளியில், அந்த மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, 15 நிமிடங்கள் மழை கொட்டித் தீர்த்தது. அந்த மழைக்குப் பிறகும், கலையாமலும், மழையில் கரையாமலும் கூடி நின்ற கொள்கையாளர்களின் ஒற்றுமையும், உணர்வும் வியக்கத்தக்கனவாக இருந்தன.

தென்கோடியில் ஓரிக்கோட்டையில் இருந்து வந்த புத்தமத பிக்குவானாலும், வடகோடியில் சண்டிகாரில் இருந்து வந்த சீக்கிய மத குருவானாலும், இடையில் இணைந்து நின்ற இந்து, கிறித்துவ, இஸ்லாமிய மத போதகர்கள், குருக்கள் ஆனாலும், தங்களின் மதங்களை உணர்ந்து, அதே வேளையில் மனிதம் நினைந்து, மனங்களால் இணைந்து கூடி நின்றனர். பல்வேறு மதங்களைச் சார்ந்த பெருமக்களுடன், கடவுள்,

தொடர்ச்சி அடுத்த பக்கம்..

முன்பக்க தொடர்ச்சி...

மத நம்பிக்கையற்ற கருப்புச் சட்டைகளும் கைகோத்து நின்றன.

நாம் ஏந்த வேண்டிய ஆயுதம் எது என்பதை நம் எதிரியே முடிவு செய்கிறான் என்று கூறுவர். இப்போது நாம் ஏந்த வேண்டிய ஆயுதம் ஒற்றுமைதான் என்பதை உணர்ந்து, வேறுபாடுகளை கடந்து, மத நல்லிணக்கத்தை இந்த மண்ணில் அந்த மாநாடு விதைத்தது. 200 ஆண்டுகளுக்கு முன்னால்,





எந்த மண்ணில் விடுதலைப் போராட்டம் வேர் பிடித்ததோ, அதே வேலூரில் இந்த முதல் விதை விழுந்திருக்கிறது. இது முதல் விதை, முதல் அலை, முதல் பொறி!

வீரம் செறிந்த 380 நாள் விவசாயிகள் போராட்டத்தை நடத்திய பாஞ்சால மண்ணிலிருந்து வந்த சீக்கியர்கள் பேசும்போது, தமிழ்நாட்டில் நீங்கள் தொடங்கி இருக்கிறீர்கள், இதனை அடுத்து நாங்கள் பஞ்சாபி முன்னெடுத்துச் செல்வோம் என்றார்.






அந்த மேடையில் பேசிய ஒவ்வொருவரின் பேச்சிலும் உணர்வு மட்டும் இல்லை, உண்மையும் இருந்தது. தமிழ்நாடு மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன், விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் தொல். திருமாவளவன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன், அருட்தந்தை கஸ்பர் ஆகியோர் நிறைவரங்கத்தில் ஆற்றிய உரைகள், அரசியல் தளத்திலும் இந்த மாநாடு பெற்றுள்ள முதன்மையை, தேவையை உணர்த்தியது!



வரும் இருபதாம் தேதி தொடங்க இருக்கும் நாடாளுமன்றத் தொடரில், பொது சிவில் சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டுவரக் கூடும் என்னும் அச்சம் நாடு முழுவதும் நிலவுகிறது. அப்படிக் கொண்டு வந்தால், இந்தியா முழுவதும் பற்றி எரியப் போகும் பிரச்சனையாக அதுதான் இருக்கும் என்பதை நாம் அறிவோம். அதனை உணர்ந்து, வருமுன் காக்கத் திரண்ட கூட்டமே வேலூர் மாநாடு!

தொடர்ச்சி அடுத்த பக்கம்..

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

கருஞ்சட்டைத் தமிழர்

## அவரால் எந்தப் பயனுமில்லை

ஆளுநரும், முதலமைச்சரும் இணைந்து செயல்பட்டால் மக்களுக்கு நல்ல திட்டங்களைக் கொடுக்கலாம் என்று புதுவை துணை நிலை ஆளுநர் பேசியிருக்கிறார். வரவேற்கத்தக்க நல்ல கருத்து.

ஆனால் தமிழ்நாட்டில் அப்படி இல்லையே!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து மக்களுக்கானத் திட்டங்களை வகுக்கிறார், செயல் படுத்துகிறார்.

இப்போது கூட ஏழை நடுத்தர குடும்பத் தலைவிகளுக்குக் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட “த்தை பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில் இருந்து செயல்படுத்த நிதி ஒதுக்கி, அதற்கானப் பணிகளைச் செய்ய உத்தரவிட்டுள்ளார்.

ஆனால் மாநில ஆளுநர் ஆர்.என்.ரவி அரசுடன் இணக்கமாக ஒத்துழைக்கவில்லை.

தமிழ்நாடு அரசால் அனுப்பப்படும் மசோதாக்களைக் கிடப்பில் போடுவதும், சனாதனம் என்றும் சனாதன நாடு என்றும் மனுவாதப் பேச்சுகளைப் பேசிக்கொண்டு இருக்கிறார்.

அண்மையில் அமைச்சர் செந்தில் பாலாஜியை நீக்கிவிட்டேன் என்றார், அடுத்த நான்கு மணி நேரத்தில் அதை நிறுத்தி வைக்கிறேன் என்கிறார், பிறகு இதற்கான சட்ட ஆலோசனை பெற டில்லி போகிறேன் என்று நிலையற்றுப் பேசி டில்லிக்குச் சென்று விட்டார்.

அதே சமயம் கடந்த அதிமுக ஆட்சியில் ஊழல் செய்த அமைச்சர்களான விஜயபாஸ்கர், ரமணா உள்ளிட்டோர் மீது வழக்கு தொடர அனுமதி கேட்டால் மவுனம் சாதிக்கிறார்.

அனுமதி கேட்டு அரசு கோப்பு கிடைக்கவில்லை என்றார். கோப்பு ஆளுநர் மாளிகையால் பெறப்பட்ட ஒப்புகைச் சீட்டை அரசு வெளியிட்டதும் அவரின் பேச்சே காணவில்லை.

இப்படி மக்கள் நலம் பேணுகின்ற தமிழக முதல்வருடன், இணக்கமாகப் போகாமல், தன் போக்காகவும், பா.ஜ.க வின் ஊதுகுழலாகவும் இருக்கும் ஆர்.என்.ரவியால் தமிழ்நாட்டிற்கு எந்தப் பயனும் இல்லை.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408



முன்பக்க தொடர்ச்சி...


கடந்த மூன்று மாதங்களாக, இந்த மாநாட்டின் வெற்றிக்காக, இரவு பகல் பாராமல் உழைத்த திராவிட நட்புக் கழகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தோழர் ஆ.சிங்கராயர் மற்றும் அவருடன் மதங்களைக் கடந்து தோளோடு தோள் நின்று உழைத்த அருமைத் தோழர்கள் அனைவருக்கும் நன்றியும் பாராட்டுகளும் உரியன!

மதங்களால் பிரிந்து நின்றாலும், மனிதத்தால் இணைந்து நிற்போம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதே என்றும் நம் இலக்காய் இருக்கட்டும்!!

# ஏன் வேண்டாம் பொது சிவில் சட்டம்?

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

இந்திய ஒன்றியத்தில் உரிமையியல் (சிவில்) மற்றும் குற்றவியல் (கிரிமினல்) என இரு வகையாக சட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் கிரிமினல் சட்டம் அனைவருக்கும் பொதுவானது. சிவில் சட்டத்தில் மட்டும் மதம், பழக்கவழக்கம், பாரம்பரியம் ஆகியவற்றின் அடிப்படையில் சில தனி நபர் சட்டங்கள் உள்ளன. ஆயினும் சிவில் சட்டத்தில் 80 சதவீதத்துக்கும் மேலான அம்சங்கள் அனைவருக்கும் பொதுவாகத்தான் இருக்கின்றது. மக்கள் தாங்கள் பின்பற்றும் மதம் தொடர்புடைய மிகச் சில அம்சங்கள் மட்டும் தனி நபர் சிவில் சட்டங்கள் எனப்படுகின்றன. அந்த தனி நபர் சட்டங்கள் மட்டும் சிலவற்றில் மாறுபடுகின்றன.




இந்து மதத்தைப் பொறுத்தவரை குடும்பவியல், திருமணம், வாரிசு, சடங்கு, கூட்டுக் குடும்ப முறை, குழந்தைகளைத் தத்தெடுத்தல், ஜீவனாம்சம், மலை வாழ் மக்களின் பழக்கவழக்கம் என பல்வேறு இந்து தனி நபர் சட்டங்கள் உள்ளன. ‘ஷரியத்’ சட்டத்தின் அடிப்படையில் இந்தியாவில் ‘முஸ்லிம் தனிநபர் சட்டம்’ 1937இல் இயற்றப்பட்டது. முஸ்லிம் தனிநபர்கள், குடும்பம், திருமணம், மணமுறிவு, வாரிசு, வக்பு உள்ளிட்ட தொண்டு நிறுவனங்களைக் கையாள்வது என இதில் இடம் பெற்றுள்ள அம்சங்களை முஸ்லீம்கள் பின்பற்றி வருகின்றனர். சீக்கியர்கள் எந்நேரமும் கத்தி வைத்திருக்கவும், காவல் துறை மற்றும் ராணுவத்தில் பணிபுரிந்தாலும் கூட அங்குள்ள விதிகளுக்கு மாறாக அவர்கள் தாடி மற்றும் தலையில் டர்பன் வைத்துக் கொள்ளவும் சீக்கியர்களுக்கான தனி நபர் சட்டம் அனுமதிக்கிறது.

அனைத்து மக்களும் தங்களது மத நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களைப் பின்பற்றிக் கொள்வதற்கான உரிமையை இந்திய அரசியலமைமைப்பு சட்டம் வழங்கியிருக்கிறது. மதம் சார்ந்த சட்டங்களில் முரண்பாடுகள் இருக்குமானால் காலத்தின் போக்குக்குத் தகுந்த சீர்திருத்தங்களை மேற்கொள்ளலாமே தவிர அதற்கு பொது சிவில் சட்டம் தீர்வு ஆகாது.

பொருளாதார சீர்கேடு, கர்நாடகா தோல்வி, மணிப்பூர் கலவரம் என பா.ஜ.க தொடர்ந்து மக்களின் நம்பிக்கையை இழந்து வரும் சூழலில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பும் அக்கட்சியை மேலும் பதட்டத்திற்கு உள்ளாக்கி இருக்கிறது. இதனால் எதை தின்றால் பித்தம் தெளியும் என்பதைப் போல் பொது சிவில் சட்டத்தை அமல் படுத்தும் முயற்சியில் தற்போது இறங்கியுள்ளது.இதற்காக நாடாளுமன்ற நிலைக் குழு 10.10.2022 அன்று அமைக்கப்பட்டு குழுவின் தலைவராக பீகார் முன்னாள் துணை முதல்வர் பா.ஜ.க. மாநிலங்களவை உறுப்பினர் சுசில்குமார் மோடி நியமிக்கப்பட்டுள்ளார். 22 ஆவது சட்ட ஆணையம் 14.06.2023 அன்று வெளியிட்ட அறிக்கையில் “பொது சிவில் சட்டம் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் மத அமைப்புகள் 30 நாட்களுக்குள் கருத்துகள் தெரிவிக்கலாம்” என்று கூறியுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி பி.எஸ்.சவுகான் தலைமையிலான 21 ஆவது சட்ட ஆணையம் பொதுமக்கள் மற்றும் மத அமைப்புகளிடம் கருத்துக் கேட்பு நடத்தி 185 பக்கங்கள் கொண்ட அறிக்கையை அளித்தது. அதில் “நாட்டில் பொது சிவில் சட்டம் அவசியம் இல்லை. தற்போதைய சூழலில் அது விரும்பத்தக்கதும் அல்ல. பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தினால் அது நாட்டில் நிலவும் பன்முகத்தன்மைக்கும் மதச்சார்பின்மைக்கும் முரணாக அமையும். நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மையை பொது சிவில் சட்டம் மூலம் சமரசம் செய்ய முடியாது. அவ்வாறு செய்தால் அது தேசத்தின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஆகிவிடும்” என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் பொது சிவில் சட்டம் அமல்படுத்த பா.ஜ.க முயல்வது இதன் மூலம் மக்களை மதரீதியாக பிளவுபடுத்தி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்ற எண்ணத்தில் தான்.

வாஜ்பாய் அவர்கள் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு எதிராகவே இருந்தது. 17.08.2000 அன்று மக்களவையில் இது குறித்து பா.ஜ.க. உறுப்பினர் யோகி ஆதித்யநாத் (இன்றைய உத்தரப்பிரதேசத்தின் முதலமைச்சர்) கேள்வி எழுப்பிய போது அன்று சட்ட அமைச்சராக இருந்த அருண்ஜெட்லி “சிறுபான்மைச் சமூகத்தினரிடமிருந்து தேவையான முன்முயற்சிகள் வராத வரை அவர்களின் தனிப்பட்ட சட்டங்களில் தலையிடக் கூடாது என்பது அரசின் நிலையான கொள்கை ஆகும். எனவே, இது தொடர்பாக எந்த காலக் கெடுவையும் வகுக்க முடியாது” என்று பதில் அளித்திருக்கிறார். இதே பதிலை 29.11.2001 அன்று மீண்டும் அமைச்சர் அருண்ஜெட்லி நாடாளுமன்றத்தில் உறுதி செய்துள்ளார்.

பொது சிவில் சட்டத்தின் நோக்கமானது மத உள்நோக்கமே தவிர, சீர்திருத்தம் அல்ல. முஸ்லீம் தனிநபர் சட்டம் குறித்து கோபம் கொண்டு “அனைவருக்கும் சமநீதி” வேண்டும் என பேசும் இவர்கள் இன்றும் தொடரும் “ஜாதிக்கொரு நீதி” குறித்து பேச மறுப்பது ஏன்? ஒரு தார மணம், ஜீவனாம்சம், பெண்களுக்கு சொத்துரிமை, வாரிசுச் சட்டம் ஆகியவற்றில் திருத்தம் செய்து இந்து சட்டமசோதாவை 1951 ஆம் ஆண்டு அன்றைய சட்ட அமைச்சர் அண்ணல் அம்பேத்கர் கொண்டு வந்த போது எதிர்த்தவர்கள் இன்றைக்கு பொதுசிவில் சட்டம் கொண்டு வரத் துடிப்பவர்களின் முன்னோடிகள் தானே.

பொது சிவில் சட்டம் சிறுபான்மையினர், பட்டியல் இன, பழங்குடி மக்களது தனிச்சட்டங்கள் உரிமைகளைப் பறிப்பதாகவும் இருக்கும். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் தனி உரிமைச் சட்டங்களை ஒரே நாளில் தூக்கி எறியவும் இது அடிப்படை அமைத்துத் தரும். இந்த ஆபத்தை உணர வேண்டும்.

“அனைவரும் சமம் அனைத்தும் பொது” என்று நினைக்காதவர்கள் கொண்டு வருவது பொதுவான சட்டமாக இருக்காது. அனைத்து மதங்களும் அனைத்து மொழிகளும் அனைத்து இனங்களும் சமம் என்று நினைக்காதவர்கள் கொண்டு வருவது பொது நோக்கம் கொண்டதாகவும் இருக்காது. எனவே பொது சிவில் சட்டத்தை எதிர்த்து அனைவரும் சட்ட ஆணையத்திற்கு கருத்துகளை அனுப்பி இதை தடுத்து நிறுத்துவதன் மூலம் நாட்டை துண்டாட நினைக்கும் போலி தேச பக்தர்களின் முகத்திரையைக் கிழிப்போம். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian